காரைதீவு பிரதேச சபை

அம்பாறை மாவட்டம்

---------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 06 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 04 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 24 இல் சபையின் தவிசாளருற்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து காரைதீவு பிரதேச சபையின் 2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மின்சாரக் கட்டணம், நீர் கட்டணம் மற்றும் தொலைபேசிக் கட்டணம் என்பவற்றிற்காக மீளாய்வாண்டில் செலுத்தவேண்டிய ரூபா 418,624 கூட்டுமொத்த தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்ற முன்னைய வருடத்திற்கான நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 903,325 மீளாய்வாண்டிற்கான வருமானமாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 1,500,000 என மறு மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு டிப்பர் வாகனத்தின் மீள்பெறுமதி நிதிக்கூற்றில் ரூபா 3,900,000 ஆக அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

1.3.3 பெறப்படவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) பிடித்துவைத்தல் வரி ரூபா 271,460 சுமார் 05 வருடகாலமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த்வேண்டியிருந்தும் வைப்புக் கணக்குகளில் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 86,653 கடன் மீதியை சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அறவிடுவதற்கு 2014 யூன் 13 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1992 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு இறுதி வரை இறைச்சிக் கடைக் குத்தகை நிலுவை ரூபா 767,894 தொகையை அறவிடுவதற்கு 2014 யூன் 13 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 1,135,600 | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் மெய்மை ஆய்வு அறிக்கை |
| மோட்டார் வாகனம் | 43,420,245 | |
| பொறித்தொகுதி | 2,597,721 | |
| நூல் நிலைய புத்தகங்கள் | 1,171,105 | நூலகப் புத்தக பதிவேடு மற்றும் மெய்மை ஆய்வு அறிக்கை |

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 ஜனவரி 13 ஆம் திகதிய 488/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான தீர்மானங்களை பெற்றுக்கொள்வதற்காகவும், மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்காக வும் சபையில் நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழில்நுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், நிதி தவிர்ந்த ஏனைய விடயங்களுக்கு பெறுப்பான குழுக்கள் மீளாய்வாண்டில் செயற்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | காசு மற்றும் களஞ்சியப் பொருட்கள் நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்ட இரு உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெற்றுக்கொள்ளப்படவில்லை. |
| (ii) அத்தியாயம் X இன் பிரிவு 217 | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிப் பிரமாணம் 572(2) | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 3,021,324 தொகை சம்பந்தமாக சபை 2014 யூன் 13 வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்.

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவின ம் ரூபா.3,795,378 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா.1,154,987 ஆகம்.

## 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134, 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு இறுதிவரை வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 ஏனைய வருமானம்

பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப் படுத்துவதற்காக நிறுவிய 10 விளம்பரப் பலகைகளுக்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் பாவனைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதனால் சபை வருடாந்தம் ரூபா 42,100 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டத் தாமதங்கள்.

மீளாய்வாண்டில் சபையினால் குறித்தொதுக்கப்பட்ட விசேட மாகாண அபிவிருத்தி (PSDG) உதவித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 754,200 பெறுமதியான பிளாஸ்ரிக் அரைக்கும் இயந்திரமானது உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது 2014 யூன் 13 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமை மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான முகாமைத்துவம்

(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு